*KALAM - International Research Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*13(1), 2020*

# பலதாரமணம் குறித்து முதல் தாரங்களின் கருத்தாக்கம்: கிண்ணியா பிரதேச நிலை பற்றிய ஆய்வு

**எம்.எம். சீயானா & எம்.ஐ.எம். ஜெஸீல்**
**இஸ்லாமிய கற்கைகள் துறை, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடம்**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.**

Correspondence: jazeelmi@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

*பலதார மணம் பற்றிய வாதமானது சமீபத்தில் அறிஞர்கள், பாரம்பரியவாதிகள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் பெண்ணியவாதிகள் ஆகியோரின் கவனத்தை ஈர்த்துள்ளதுள்ளது. இந்நிலையில் பலதாரமணம் பற்றி கிண்ணியா பிரதேசத்திலுள்ள பலதார குடும்பங்களை சேர்ந்த மூத்த தாரங்களின் கருத்து நிலையை இணங்காணுதலும் அதனை இஸ்லாமிய நோக்கில் பகுப்பாய்வு செய்வதுமே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வுக்காக முதல் நிலைத்தரவாக குறிக்கோள் மாதிரி முறையில் பலதாரமணியாளர்கள் நேர்காணப்பட்டதுடன் தரவுகள் குறியீட்டு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆய்வுக்குரிய கோட்பாட்டம்சங்களைப் பெறுவதற்கு இலக்கிய மீளாய்வுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் கண்டறிதல்களாக, பலதாரமண வாழ்வில் ஒவ்வொரு பெண்ணினதும் அறிவு நிலை, அனுபவம், சூழல் என்பன ஆளுக்காள் வித்தியாசப்படுகிறது. பெரும்பாலான மறுமணங்கள் மூத்த மனைவியின் ஒப்புதலின்றி நடைபெற்று இருப்பதோடு கணவனின் மற்றுமொரு திருமணத்தினைத் தொடர்ந்து முதல் மனைவிகளில் உட, உள மற்றும் சமூக பிரச்சினைகள் நீண்ட காலமாக தொடர்ந்து வெளிவருவதாகவும் அறியமுடிகிறது. தனது கணவன் தனக்கு மட்டுமே உரியவன் எனும் மனநிலை, கிண்ணியா பிரதேசத்தின் பிரத்தியோக சூழல், பெண்களின் மனோபாவம், குடும்ப வாழ்வு தொடர்பான விழிப்புணர்வின்மை, மற்றுமொரு திருமணத்துக்கான ஆண்களின் பிழையான அணுகுமுறைகளும் பலதாரமணம் குறித்த எதிர்மறையான கருத்தமைவுக்கு காரணமாக அமைகிறது. இந்நிலையானது கணவன்-மனைவி உறவிலும் பெற்றோர்-பிள்ளை உறவிலும் சகமனைவிமார்களுக்கு இடையிலான உறவு நிலையிலும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை தோற்றுவித்திருக்கிறது. பலதாரமணம் குறித்த சார்புநிலை வாதங்கள் கிண்ணியா வாழ் மூத்த தாரங்களுக்கு மத்தியில் மிகக்குறைவாக இருப்பதோடு ஒப்பீட்டளவில் எதிர்மறையான கருத்து நிலைகளே மேலோங்கியும் காணப்படுகின்றன. நடைமுறையில் பலதாரமணத்தினுள் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்கு சட்டரீதியான தீர்வுகளை வழங்குவதில் அக்கறை கொள்வதுடன் பலதார குடும்பங்களுக்கான மார்க்க போதனைகளை நடைமுறைப்படுத்த, உருவாக்க, செயல்படுத்த, மதிப்பீடு செய்ய வேண்டியதன் அவசியத்தை முஸ்லிம் குடும்பங்களுக்கு உணர்த்த வேண்டும். மேலும் பெண்களின் மன ஆரோக்கியத்தில் பலதாரமணம் ஏற்படுத்தும் விளைவுகள் குறித்தும் தற்காலத்தில் கூடுதல் ஆராய்ச்சி நடத்தப்பட வேண்டும்.*

**பிரதான சொற்கள்:** *பலதாரமணம், முதல் தாரம், குடும்பம், கருத்து நிலை,* ***கிண்ணியா***

## 1. ஆய்வுப் பின்னணி

*திருமணமானது மனித வரலாறு நெடுகிலும் பல்வேறு சமூகங்கள் மத்தியில் நடைமுறையில் இருந்து வந்துள்ளதுடன் அவற்றின் வடிவங்களும் வெவ்வேறாக அமைந்து இருந்திருக்கின்றன.* (Arif, *2018) திருமண வடிவங்களில் ஒன்றான பலதாரமணமானது* (polygamy) *கிரேக்க வார்த்தையான பாலி (பல) மற்றும் கேமி (திருமணம்) ஆகிய சொற்களில் இருந்து பிறந்தது* (Nurmila, *2009). பலதாரமணம் என்பது ஒருவர் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை கொண்டிருக்கும் வழக்கத்தினைக் குறிக்கிறது* (Jameela, *2005). எனவே, உலகெங்கிலும் உள்ள*

வெவ்வேறு மதங்கள் பலதாரமணத்தினை ஊக்குவித்திருக்கின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளைக் கொண்ட முப்பத்தாருக்கு மேல் பெயரிடப்பட்ட ஆண்களை பைபிள் சுட்டிக் காட்டுகின்றது. யாக்கோபுக்கு நான்கு மனைவிகளும், ஆபிரகாமுக்கு மூன்று மனைவிகளும், மோசேக்கு இரண்டு மனைவிகளும் இருந்தனர். (Janas Khan, 2015) பௌத்த சமுதாயத்திலும் பலதாரமண நடைமுறை இருந்துள்ளது. பலதாரமணத்தின் காரணமாக மறுபிறப்புகளிலும் கூட ஒருவருக்கொருவர் முடிவில்லா வெறுப்பைக் கொண்டிருந்த பெண்களைப் பற்றி (DH.A.1.43.FF.) தம்மபத அத்தாஹத கதையில் குறிப்பிடப்படுகிறது (Thobejane, 2016). ஆரம்பகால கிறிஸ்தவர்களும் யூதர்களைப் பின்பற்றி பலதாரமணம் செய்யக்கூடியவர்களாக இருந்துள்ளார்கள் (Jameela, 2005).

எனவே இஸ்லாமும் பலதாரமண முறையினை அனுமதித்ததுடன் அதன் எண்ணிக்கையை நான்காக வரையறுத்து பலபதி திருமண முறையினை முற்றாக தடையும் செய்தது (Nadia, 2016). இஸ்லாமிய சட்டத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று நீதியை பாதுகாத்து பொது நலனை உறுதி செய்வது ஆகும் (Mashhour, 2005). அதனடிப்படையில் ஒரு கணவர் தனது மனைவிகளிடத்தில் நியாயமாக நடந்து கொள்ளுதலை இஸ்லாம் எதிர்பார்கிறது. இதில் சமத்துவம், பொருளாதார பலம், உணர்வுகள், பாலியல் தேவைப்பாடுகள் குறித்தும் கவனத்திற் கொள்ளப்படுகிறது (cited by இஸியாகு, 2014). "உங்களுக்கு பிடித்தமான பெண்களை இரண்டிரண்டாகவோ, மும்மூன்றாகவோ, நன்நான்காகவோ மணந்து கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் இவர்களிடையே நீதமாக நடந்து கொள்ள முடியாது எனப்பயந்தால் ஒரு பெண்ணையே மணந்து கொள்ளுங்கள்" (அந்நிஸா 4:3). எனவே பலதாரமண வாழ்வில் பெண்களிடம் நீதமாக நடப்பதை ஒரு ஆண் நினைவிற் கொள்ளல் வேண்டும்.

பெண்கள் உரிமை விவகாரமாக கருதப்படும் பலதாரமணத்துக்கான காரணங்கள் ஒவ்வொரு சமூகத்தின் பொருளாதார, கலாசார, கல்வி மற்றும் வளர்ச்சி போன்ற நிலைகளில் தேடப்பட வேண்டும் (cited by ஒபத்து, 2009). உலகளவில் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் பலதாரமணம் மேற்கொள்ளல் சட்டரீதியில் அனுமதிக்கப்பட்ட ஒரு திருமண முறையாக விளங்கினாலும் சில நாடுகளில் அதற்கு வரையறைகளும், கட்டுப்பாடுகளும் காணப்படுகின்றன (Nihaya, 2013). துருக்கி, சைப்ரஸ், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் பலதாரமணம் சட்டவிரோதமானது என்றாலும் இத்திருமண வழக்கம் மத்திய கிழக்குப் பகுதிகள், ஆசியா, ஆபிரிக்கா மற்றும் ஓசியானிக் கலாசாரங்களில் நடைமுறையில் உள்ளதனைக் காணலாம் (Al-Krenawi, 1997).

பெண் உரிமைசார் அமைப்புகளுக்கு மத்தியில் பலதாரமணமானது ஒரு விவாதத்துக்குரிய விடயமாக இருந்து வருகின்றது. அந்தவகையில் மேற்கத்திய பெண்ணிலைவாதிகளுக்கு மத்தியில் பலதாரமணமானது அடிப்படையில் பாலினம் மற்றும் மனித உரிமைகளுக்கு பிரச்சினையாக இருப்பதாகவும் பெண்களின் கௌரவத்தை குறைக்கும் ஒரு செயலாகவும் பெண்களை ஓரங்கட்டும் ஒரு திருமண நடைமுறையாகவும் கருதப்படுகிறது. (Arif, 2018) சில நாடுகளில் பலதார மணம் மீதான வரம்புகள் பெண்கள் குழுக்களின் அழுத்தத்தின் கீழ் செயல்படுத்தப்படுவதாகவும் அறியமுடிகிறது (ஹீதர், 2015). சுவிஸ்சிலாந்தில் (2007) நடத்தப்பட்ட ஆய்வொன்றில் பலதாரமணத்தில் ஆணாதிக்கமும், கலாசாரமும் வலுவானவை என்று கண்டறியப்பட்டன (cited by தகாயிந்திசா, ஆர்மியா, ஜுவைரியா, அர்பயா, போகியா (2017) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் பல்வேறு இனத்தைச் சேர்ந்த பதினாறு முஸ்லிம் பிலிப்பைன்ஸ் பெண்கள் நேர்காணல்களுக்கு உட்படுத்தப்பட்டு பலதாரமண குடும்பங்களில் பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும், கணவர்களுடனான உறவுகள் தொடர்பிலும் விவரிக்கப்பட்டுள்ளது. கர்னாவி மற்றும் கிரஹம் (Al-Krenawi & Graham, 1999) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வில் பலதாரமணக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களை விட ஒற்றைத் திருமண குடும்பங்களில் உள்ளவர்கள் பலதார மணம் குறித்த நேர்மறையான அணுகுமுறைகளைக் கொண்டிருந்தனர் என்றும் பலதார குடும்பக் கட்டமைப்புகளுக்கான காரணங்கள் வயது மற்றும் பாலினத்தால் வேறுபடுகின்றன என்றும் ஆய்வு முடிவுகள் குறிப்பிடுகின்றன. மேலும், வரத் மற்றும் ஏலியன் கர்னாவி (Al-Krenawi, 2016) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு ஆய்வில் 10 பலதாரமண குடும்பங்கள் நேர்காணப்பட்டு அதில் ஐந்து குடும்பங்கள் நன்கு செயல்படும்

குடும்பங்களாகவும், ஐந்து குடும்பங்கள் மோசமாக செயல்படுவதாகவும் கருதப்பட்டதுடன் இவ்விரு குடும்பங்களிலும் பலதாரமணம் வலிமிகுந்து இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாறு பலதாரமணம் குறித்து பல எதிர்மறையான சான்றுகள் இருப்பினும் மறுபுறம் பலதாரமணத்தை ஆதரிப்பவர்களும் இல்லாமலில்லை. பலதார குடும்பங்களில் மகிழ்ச்சியாக வாழக் கூடியவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். எழுபது சதவீதத்துக்கும் அதிகமான சமூகத்தினர், ஆண்கள் மற்றுமொரு பெண்ணை திருமணம் செய்வதற்கு அனுமதித்திருப்பதாக மானுடவியலாளர்கள் கருதுகின்றனர் (Thobajane, *2016*). டியூனிசியாவில் பலதாரமணம் முற்றாக தடை செய்யப்பட்டிருந்தாலும் அண்மைக்காலங்களில் டியூனிசிய பெண்கள் பலதாரமணத்துக்கு ஆதரவாக கோசமிட்டு வருவதனையும் அவதானிக்கலாம். பலதாரமணம் பெண்களை அடக்குவதற்கான ஒரு வழியாகப் பயன்படுத்துவதற்காக அல்ல, மாறாக அவர்கள் கவனித்துக் கொள்ளப்படுவதை உறுதி செய்வதற்கான ஒரு ஏற்பாடென ஆமினா வதுத் சுட்டிக்காட்டுகின்றார் (Wadud, 1999). மேலும் காஸவ்னி, ஹிஜாஸி, சல்மான் (Khasawneh et al, *2011*) போன்றோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் பலதாரமண குடும்பங்களிலுள்ள பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு முடிந்த அளவு நிதி ரீதியான அனைத்து கவனிப்பையும், ஆதரவையும் வழங்கியுள்ளதாக ஆய்வு முடிவுகள் குறிப்பிடுகின்றன. சட்டத்தின் கீழ் பெண்கள் சம உரிமையை பெறும் பொருட்டு ஏனைய நாடுகளில் உள்ள சட்டங்கள் பற்றியும் நாம் அறிந்திருப்பது அவசியமாகும். அந்த வகையில் பாக்கிஸ்தானில் ஒரு கணவர் இன்னொரு பெண்ணை திருமணம் செய்து கொள்ள முதல் மனைவியின் சம்மதத்தினை பெற்றிருப்பதுடன் காதி நீதவானின் முன் அனுமதியையும் பெற்றிருக்க வேண்டும் (*1961* ஆம் ஆண்டின் பாக்கிஸ்தானிய முஸ்லிம் குடும்ப சட்டத்தின் பிரிவு *6*). சிரியாவில் பலதாரமணம் செய்து கொள்ள நீதிமன்றத்தில் முன் அனுமதி பெறுவதோடு அந்த ஆண் இரண்டு மனைவிகளை பராமரிக்க தகுதியற்றவர் எனக் கருதப்படுமிடத்து திருமணத்துக்கான அனுமதி காதி நீதவானினால் மறுக்கப்படலாம் என்றும் அறியப்படுகிறது (*1953* ஆம் ஆண்டு *59* ஆம் இலக்க சிரியா நாட்டின் தனியாள் நிலைச் சட்டம்). அதே நேரம் காதி நீதவானின் அனுமதி இன்றி பலதாரமணம் செய்ய முடியாது என்று ஈராக்கின் குடும்ப சட்டம் குறிப்பிடுகிறது (*1959* ஆம் ஆண்டின் ஈராக் நாட்டு தனியாள் நிலை சட்டக் கோவை உறுப்புரை *3*). இலங்கை முஸ்லிம் தனியார் சட்டமும் ஒரு முஸ்லிமான ஆண் நான்கு பெண்களை திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது. இலங்கையை பொறுத்தவரை விகிதாசார அடிப்படையில் பலதாரமணமானது அரை சதவீதத்துக்கும் குறைவாகவே இருந்தாலும் இத்திருமணம் காரணமாக கணவனினால் கைவிடப்படும் மனைவிகளும், பிள்ளைகளும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றனர் (மர்சூப், *2008*).

ஒரு முஸ்லிமான ஆண் நான்கு திருமணங்களை முடிக்க அனுமதி இருந்தாலும் இன உறவு கொண்ட அல்லது பால்குடி உறவு கொண்ட பெண்களை திருமணம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. இன்னும் MMDA *1951* ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு *80 1 (1)* இன் படி ஒரு ஆண் தனது மனைவி உயிருடன் இருக்கும் போது அவரது சகோதரியை திருமணம் செய்ய முடியாது என்பதனை சட்டத்தில் விசேடமாக குறிப்பிடுகின்றது (சூளனி, *2009*). இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் பலதாரமணத்திலுள்ள பிரதான விளைவாக குழந்தைகள் பராமரிக்கப்படாமையும், கணவர்கள் முந்தைய அல்லது அடுத்தடுத்த மனைவிகளை விவாகரத்து செய்துள்ளமையும் ஆகும். இத்தகைய விளைவுகளினால் பெண்கள் அச்சுறுத்தப்படுவதுடன், சிலர் திருமண வாழ்வில் வாழவும் நிர்பந்திக்கப்படுகிறார்கள். பொதுவாக இலங்கையில் உள்ள முஸ்லிம் பெண்கள் பலதாரமணத்தினை திருமணத்தின் ஒரு வகை என்பதனை அறிந்திருக்கவில்லை (Sri Lanka Cedaw Report, 2017).

இலங்கையை பொறுத்தளவில் இஸ்லாம் கூறிய வழிமுறைகளின்படி ஓர் ஆண் பலதாரமணம் செய்துகொள்ள தகுதியுடையவனா என்று சரியாகப் பார்க்கப்படுவதில்லை. பலதாரமணத்தை நாடுபவர்கள் அதன் கட்டுப்பாடுகளை மீறும் போது எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற விடயம் தொடர்பில் எத்தகைய சட்ட ஏற்பாடுகளும் இல்லை. அத்தோடு பலதாரமணம் தொடர்பிலான ஷரிஆ ரீதியிலான கடப்பாடுகளை MMDA உள்ளடக்கவில்லை (ஹஸனாஹ், *2015*). மேலும் அண்மைக்காலங்களில் கணவனினால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு இழப்பீடு மற்றும் பராமரிப்புடன் விவாகரத்து பெற உதவுவதை விட, இரண்டாவது அல்லது மூன்றாவது திருமணம் போன்றவற்றுக்காக கணவரின் நடத்தையை ஏற்றுக்கொள்ளுமாறு காதி

நீதிபதிகள் பெண்களுக்கு அழுத்தம் கொடுப்பதோடு ஒரு பெண்ணிடமிருந்து குறிப்பாக ஒரு ஆண் மற்றொரு மனைவியை எடுத்துக் கொள்வது தொடர்பாக ஒரு புகார் தோன்றினால், காதி நீதிபதிகள் பெரும்பாலும் தீர்ப்பு வழங்குவதில் தாமதப்படுத்துவதையும் அறியமுடிகிறது. ஆய்வுப் பிரதேசமான கிண்ணியாவானது திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள ஓர் இஸ்லாமிய பாரம்பரியமிக்க பிரதேசமாக விளங்குகிறது. இங்கு பெரும்பான்மையானவர்களாக முஸ்லிம்கள் (77,945) காணப்படுகின்றனர். மேலும் இலங்கைத் தமிழர்கள், சிங்களவர்கள், கிறிஸ்தவர்கள் போன்ற இனத்தவரும் சிறிய அளவில் உள்ளனர். கிண்ணியாவில் மொத்தமாக 31 கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன. இதில் சுமார் 17 பிரிவுகள் நகர சபையினையும் 14 பிரிவுகள் பிரதேச சபையினையும் உள்ளடக்கியுள்ளது. இப்பிரதேசத்தில் விவசாயம் மற்றும் மீன்பிடிப்பு என்பன முக்கியமான ஜீவனோபாயமாக விளங்குகின்றன. தொழிற்துறையினைப் பொறுத்தவரை ஆண்கள் தனியார் நிறுவனங்களிலும், அரச நிறுவனங்களிலும் கடமை புரிகின்றனர். மேலும் இங்குள்ள முஸ்லிம் பெண்களும் குறிப்பிட்டளவு தொழிற்துறையில் பங்கேற்பவர்களாக உள்ளனர். இவ்வாறான பின்னணியில் பலதாரமணம் தொடர்பில் கிண்ணியாவிலுள்ள பெண்களிடையே பலதாரப்பட்ட கருத்துக்கள் இருப்பதாகவும் அறிய முடிகிறது. இந்நிலையில் கிண்ணியாவிலுள்ள பலதார குடும்பங்களை சேர்ந்த மூத்த மனைவிகள் பலதாரமணம் தொடர்பில் எவ்வாறான கருத்து நிலைகளைக் கொண்டுள்ளனர் என்பதை கண்டறிவதே இவ்வாய்வின் பிரச்சினையாக உள்ளது.

## 2. ஆய்வு முறை

பண்புரீதியான இவ்வாய்வுக்குரிய முதல் நிலைத்தரவுகளாக பலதார குடும்பங்களை சேர்ந்த பத்தொன்பது மூத்த தாரங்களுடன் நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவை பெண்களின் உள்ளார்ந்த எண்ணங்களையும் உணர்வுகளையும் கருத்துக்களையும் திறந்து பகிர அனுமதிக்கும் நோக்கம் கொண்டவை. பலதாரமணம் மேற்கொண்டவர்கள் தொடர்பில் துல்லியமான தகவல்கள் கிடைக்கப் பெறாமையினால் இவ்வாய்வானது குறிக்கோள் மாதிரி அடிப்படையில் அமைவதுடன் நேர்காணல்களானது பெண்களுக்கு மிகவும் வசதியான நேரங்களில் நடத்தப்பட்டன. நேர்காணலுக்கு முன்பு பங்கேற்பாளர்களிடம் ஆய்வு தொடர்பான தெளிவு வழங்கப்பட்டு அவர்களின் ஒப்புதலும் பெறப்பட்டது. அண்ணல் நகர், பைசல் நகர், மஹ்ரூப் நகர் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்த பெண்களிடம் இருந்தே அதிகமான நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டன. காரணம் ஏனைய கிராமங்களை விட இங்குள்ள குடும்பங்கள் ஒப்பீட்டளவில் பலதார குடும்பங்களாக உள்ளதாக அறியமுடிந்தது. ஆய்வுக்காக பெறப்பட்ட தரவுகள் குறியீட்டு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

## 3. கலந்துரையாடல்களும் கண்டறிதல்களும்

நேர்காணல்களின் போது பதிலளித்தவர்கள் பலதாரமண வாழ்வு தொடர்பிலும் தனது கணவரின் மற்றுமொரு திருமணத்துக்கு பின் தாம் திருமண வாழ்க்கையில் அனுபவித்த போராட்டங்கள் தொடர்பிலும் தங்கள் கணவர்களுடனான உறவுகளைப் பற்றியும் சக மனைவிகளுடனான உறவு நிலை, பெற்றோர் பிள்ளை உறவு நிலை தொடர்பிலும் பகிர்ந்து கொண்டனர். அவர்களின் கணவர்களின் தொழில்களை பொறுத்தவரை அரச ஊழியர்கள், ஆரிசியர்கள், சிறு வணிகர்கள், சில்லறைக் எகடை வியாபாரி, மீன் வியாபாரிகள், வாகன ஓட்டுனர் போன்று வேறுபட்டு அமைகின்றன. பங்கேற்பாளர்களில் அதிகமான பெண்கள் வீட்டுப் எபணியாளர்களாக இருக்கின்றனர். பலதார குடும்பங்கள் அனைத்தும் கருக்குடும்பமாக உள்ளதுடன் வீட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை சராசரியாக ஆறு பேராக இருக்கிறது. பலதாரமணியாளர்களின் கல்வி நிலையினைப் பொறுத்தவரை அதிகமானோர் இடைநிலைக் கல்வியை கற்றவர்களாகவும் எவரும் உயர்கல்வியை பெறாதவர்களாகவும் உள்ளனர். எனவே பலதாரமணியாளர்கள் அனைவரும் முறையான கல்வியை பெற்றவர்களாகவே உள்ளனர். பலதாரமணியாளர்களிடையே பொதுவாக பலதாரமணம் குறித்து இரு வேறுபட்ட கருத்து நிலைகள் காணப்படுகின்றன. ஒப்பீட்டளவில் பெரும்பான்மையானோர் (17 பேர்) பலதாரமணத்துடன் உடன்படாதவர்களாகவும் மிகச் சொற்பமானவர்களே (2 பேர்) பலதாரமணத்தினை ஆதரிப்பவர்களாகவும் உள்ளனர்.

எனவே, பலதாரமணம் குறித்த பெண்களின் முன்னோக்குகளில் முக்கியமாகக் கருதக் கூடிய விடயங்களை பின்வருமாறு நோக்குவோம்.

### 3.1 குடும்ப வாழ்வு

பலதாரமண குடும்ப வாழ்வு தொடர்பில் முக்கியமாக கருதப்படக் கூடிய சில அம்சங்கள் தொடர்பில் பெண்களிடம் கலந்துரையாடப்பட்டன. பெரும்பாலான பெண்களின் கருத்துக்களின் அடிப்படையில் நோக்கும் போது பலதாரமணமானது குடும்ப வாழ்வுக்கு பொருத்தமற்றதெனத் தெரிகிறது. காரணம், தமது கணவரின் மற்றுமொரு திருமணத்தைத் தொடர்ந்து தாம் வாழ்வில் பல எதிர்மறையான நிகழ்வுகளையும் பிரச்சினைகளையும் சந்தித்து வருவதாக குறிப்பிடுகின்றனர். எனவே குடும்ப வாழ்வில் பலதாரமணத்தினுடைய ஆதிக்கமானது கணவன் மனைவிக்கிடையிலான உறவுப் பிணைப்பு முறிய காரணமாக அமைகிறது என்பது அதிகமான பெண்களின் கருத்து நிலையாக இருக்கிறது. பெரும்பான்மையான மனைவிகளின் பதில்களின் அடிப்படையில் நோக்கும் போது பலதாரமணமானது முஸ்லிம் ஆண்களின் உரிமையாக எடுத்துக் கொள்ளப்படவில்லை போல் தோன்றுகிறது. ஏனெனில் இஸ்லாத்தில் பலதாரமணத்தினை ஆண்கள் உரிமையாக கருதுகிறார்களே தவிர ஏனைய மார்க்க விடயங்களில் தமது கடமைகளை செயற்படுத்துவதில் அசமந்தப் போக்கினை காட்டுவதால் அவர்களுக்கு பலதாரமணம் தேவையற்றதென இவர்கள் குறிப்பிடுகின்றனர்.

#### 3.1.1 கணவன் - மனைவி உறவு

ஆண்கள் குடும்பத்தின் தலைவர்கள், எனவே அவர்கள் ஒருவரை திருமணம் செய்ய எந்த நேரத்திலும் முடிவெடுக்கலாம் என்பது பெண்களின் கருத்துக்களிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது. தனது கணவர் ஏன் இன்னொரு பெண்ணை மறுமணம் செய்து கொண்டார் என்பதை பெரும்பாலான பெண்கள் அறிந்திருப்பதில்லை என செரிபினி (Sheribny, *2005*) குறிப்பிடுவதனைப் போன்று இவ்வாய்வில் பங்கேற்ற பெரும்பாலான மூத்த மனைவிகளும் தமது கணவனின் மற்றுமொரு திருமணத்துக்கான காரணம் பற்றி தாம் அறிந்திருக்கவில்லை எனக் குறிப்பிடுகின்றனர். பெரும்பாலான பெண்களின் கருத்துக்களின் அடிப்படையில் நோக்கும் போது அவர்களின் கணவர், சக மனைவி மற்றும் பிள்ளைகளுக்கிடையிலான உறவு நிலைகள் சாதகமற்றிருப்பதாகத் தெரிகின்றது. பலதாரமண வாழ்வில் முதல் மனைவிகளுக்கு உட, உள சமூக ரீதியிலான பல பிரச்சினைகள் தொடர்ந்து இருப்பதோடு மறுமணத்தின் காரணமாக கணவரிடத்தில் மூத்த மனைவிகளின் செயல்பாடுகள் கடுமையான எதிர்வினைகளைக் கொண்டிருப்பதாகவும் செரிபினி (Sheribny, *2005*) கருதுகிறார்.

அவ்வாறே இவ்வாய்விலும் கூட தன் கணவன் பிற மனைவியுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதனை மூத்த தாரங்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். வீட்டில் தொடர்ச்சியாக ஏற்படும் சண்டைகள் மற்றும் முரண்பாடுகளால் இயல்பாகவே கணவன் மீதான ஆர்வம் குறைந்து கணவரின் பாலியல் ரீதியான விருப்பங்களுடன் இணங்க மறுப்பதாகவும் அறியமுடிகிறது. காரணம் தன் கணவன் தனக்கு மட்டுமே உரியவன் எனும் பெண்களின் இயல்பான மனோநிலை வெளிப்படையாகவே பலதாரமண வாழ்வுடன் முரண்படுவதை பிரதிபலிக்கின்றது. அந்தரங்கம் பேணும் விடயங்களிலும் தனக்கான தனியுரிமை கிடைக்க வேண்டும் என்பதில் அதிகமான பெண்கள் உடன்படுகிறார்கள். எனவே பலதாரமண வாழ்க்கையில் ஒரு மனைவிக்குரிய இரகசியங்கள், அந்தரங்கள் பேணுதல் என்பன இல்லாமல் போய்விடுகிறது என்பது பெரும்பாலானவர்களின் கருத்து நிலையாக இருக்கிறது. அது மாத்திரமன்றி ஒரு சில பலதார குடும்பத்தை சேர்ந்த மனைவிகள் தமது கணவனின் தொடர்பை முழுமையாக துண்டித்து பிடிவாதத்தின் அடிப்படையில் தனித்து வாழ்வதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இந்நிலை தொடருமெனின் அது திருமண உறவினை முறித்து விடும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த விடயத்தில் ஒரு பெண் தனது கணவனுக்குக் கட்டுப்படுவதில் தவறு செய்பவளாகவே கருதப்படுகின்றாள். ஏனெனில் ஒரு சிறந்த மனைவி தனது கணவனை சபிப்பவளாகவோ, திட்டுபவளாகவோ, வீட்டை விட்டு வெளியேறக் கூடியவளாகவோ இருக்க மாட்டாள். ''பெரும்பாலான நேரங்களில் எனக்கும் கணவனுக்கும் கருத்து முரண்பாடுகள் ஏற்படுவதால் அவருடன் நாள் கணக்கில் பேசாமல் இருந்திருக்கிறேன். ஒவ்வொரு நாளும் வீட்டில் சண்டையும் பிரச்சினைகளும் இருப்பதால் நிம்மதியற்ற வாழ்வு வாழ்ந்து வருகிறேன்.

இருப்பினும் ஒரு தாய் எனும் வகையில் என் பிள்ளைகளை கவனித்துக் கொள்கிறேன்'' (நேர்காணல் 5). பொதுவாக ஒற்றைப் பெண்களுடன் ஒப்பிடும்போது பலதார குடும்பங்களிலுள்ள பெண்களுக்கு மன-சுகாதார பிரச்சினைகள், சோகம், மனச்சோர்வு, பதட்டம், விரோதப் போக்கு, மனநோய் மற்றும் மனநலக் கோளாறு மற்றும் குறைவான வாழ்க்கை மற்றும் திருமண திருப்தி, சிக்கலான குடும்ப செயல்பாடு மற்றும் குறைந்த சுயமரியாதை ஆகியவை குறிப்பிடத்தக்க அளவில் இருப்பதாக ஸ்பாட் லிண்ட்சே (Shepard, 2012) தனது ஆய்வின் மூலம் உறுதிப்படுத்துகிறார். இத்தகைய நிலைகளே மூத்த தாரங்களுக்கு மத்தியிலும் இருப்பதாக ஆய்வின் மூலம் அறிய முடிகிறது.

அநேகமான மூத்த தாரங்களின் தமது கணவன்மார்கள் தம்முடன் அன்பாக நடந்து கொள்வதனை விட எரிந்து விழுவதிலேயே அதிக நேரத்தைக் கழிப்பதாக கருதுகிறார்கள். மேலும் ஒரு சில பலதார குடும்பங்களில் உள்ள ஆண்களின் முதல் மனைவி வெளிநாடுகளில் பணிப்பெண்ணாகச் சென்று தொழில் புரியும் காரணத்தினால் கணவன் பராமரிக்கின்ற விடயத்தில் பராமுகமாக இருப்பதாகவும் அறியமுடிகிறது. ஒரு சில கணவன்மார்கள் இன்னொரு திருமணத்துக்குப் பின்னர் முதல் மனைவியையும் பிள்ளைகளையும் கைவிட்டுச் சென்று சில மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் மூத்த மனைவியுடன் சேர்ந்து வாழ்ந்த சம்பவங்களும் நடந்தேயிருக்கின்றன. பலதார குடும்பங்களின் ஒரு பகுதியாக இருக்கும் மனைவிக்கான நிதிசார் தேவைகளும் அநேகமான குடும்பங்களில் புறக்கணிக்கப்பட்டுள்ளமை ஆய்வின் முக்கிய கண்டறிதல்களில் ஒன்றாகவுள்ளது. குடும்ப வாழ்வு நிம்மதியற்று போக அவரவர்களின் கடமைகளும், பொறுப்புகளும் சரியாக பேணப்படாமையும் ஒருவர் மற்றவர் மீது காட்டும் வெறுப்பும், பொடுபோக்கான நடத்தைகளுமாகும். அல்லாஹ்வின் பார்வையில் ஆண்களும், பெண்களும் சமனானவர்கள். ஆகவே ஒரு முஸ்லிம் தனது உலக வாழ்கை விவகாரங்கள் அனைத்திலும் நீதியை கடைபிடிக்க வேண்டும் என்பதைப் போல திருமண வாழ்விலும் ஒருவருக்கொருவர் சமத்துவத்தையும் நீதியையும் பேணுவது இருவரினதும் கடமையாகும். இதில் ஒருவரை மாத்திரம் குற்றம் காண முடியாது. ஆணோ, பெண்னோ யாரும் தவிர்க்காத வகையில் அவரது அதிகாரத்தின் கீழ் இருப்பவர்களுக்கு பொறுப்பாளி ஆவர்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (பெண்ணே நீ உன்னுடைய கணவனுக்குச் செய்யும் கடமைகளில்) எந்நிலையில் இருக்கின்றாய் என்பதைக் கவனித்துக் கொள். நிச்சயமாக அவர் ஒன்று உன்னுடைய சொர்க்கமாக இருப்பார். அல்லது நரகமாக இருப்பார்'' (அஹ்மத். இல. 18233). எனவே, சிறந்த மனைவியானவள் தனது கணவனின் விருப்பத்திருக்கு இணங்கி நடப்பவளாக இருப்பதுடன் கணவனுடைய கடமைகளை முறையாக நிறைவேற்றுகின்ற போது அவள் சுவர்க்கத்தை அடையும் வாய்ப்பினையும் பெற்றுக்கொள்ளலாம். இஸ்லாத்தில் கைவிடப்பட்ட பெண்களுக்கும், விதவைப் பெண்களுக்கும் மறுவாழ்வு அளிக்கப்பட வேண்டும் என்ற விடயத்தினை உணர்ந்தவர்களாகவே கிண்ணியாப் பிரதேச பெண்கள் இருக்கின்றனர் என்பதனை அவர்களின் கருத்துக்களில் இருந்து விளங்கிக் கொள்ள முடிகின்றது. எனினும் மனைவியை இழந்த ஆண்கள் அத்தகைய பெண்களை திருமணம் செய்து கொள்ளலாம் அல்லது அவர்களுக்கு தேவையான வாழ்கை செலவுகளுக்குரிய உதவிகளை பொது அமைப்புகளினூடாக செய்வது நல்லது என்றும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

மேலும் ஒருவருக்கு இரண்டு மனைவிகளை இருப்பதனை எந்த ஒரு பெண்ணாலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், அவ்வாறு இரண்டு மனைவிகள் இருந்தால் மனைவிமார்களிடம் கணவனால் நேர்மையாக இருக்க முடியாதென்பதும் பெரும்பாலான பெண்களின் கருத்து நிலையாக இருக்கின்றது. அதே போல முதல் மனைவி உயிருடன் இருக்கும் போது தனது கணவர் மற்றுமொரு பெண்ணை திருமணம் செய்வதை தாம் விரும்பவில்லையெனவும் குறிப்பிடுகின்றனர். அதே நேரம் ஒரு சில திருமணங்கள் இஸ்லாமிய முறைப்படி நடைபெற்று இருப்பினும் முறையாக திருமணப்பதிவு செய்யப்படவில்லை என்பதும் ஆய்வின் போது அறியக் கூடியதாக இருந்தது. குடும்பங்கள் சீரழிவை நோக்கிச் செல்லக் காரணம், முஸ்லிம்கள் இஸ்லாம் கூறும் குடும்பவியல் ஒழுங்குகளை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதும் எதிர்மாறான மனோபாவங்களும் தான் என்பது புலனாகிறது. முதல் மனைவியின் ஒப்புதல் இல்லாத போதிலும் அதிகமான திருமணங்கள் நடைபெற்றிருப்பது ஆய்வின் மற்றுமொரு கண்டறிதலாக இருக்கின்றது.

### 3.1.2 சக மனைவிமார்களுக்கு இடையிலான உறவு

சக மனைவிகளிடையே சமத்துவமின்மை நிலவுவதாக அதிகமான பெண்களின் கருத்துக்களில் இருந்து விளங்கிக் கொள்ள முடிகின்றது. அதிலும் அதிகமான பெண்கள் தனது கணவனின் இணை மனைவியை தனது விரோதியாக காணும் அதே நேரம் அவர்களுடன் சண்டை பிடித்தல், தகாத வார்த்தைகளினால் தூற்றுதல் போன்றவற்றினை செய்யக் கூடியவர்களாகவும் தமது கணவர் தனது மற்ற மனைவிகளைப் பற்றி பேசுவதை விரும்பாதவர்களாகவும் உள்ளனர். இன்னும் அநேகமானோர் தன் கணவனை மற்ற மனைவியிடம் செல்வதனை தடுக்கக் கூடியவர்களாக உள்ளனர். எனவே பலதாரமண குடும்பங்களில் பெண்களிடையே போட்டியும் பொறாமையும் அதிகமாக இருப்பதனை அறியமுடிவதுடன் அதிகமான முதல் மனைவிகள் தமது கணவனின் இரண்டாவது மனைவியின் மீது அதிகாரத்தை கொண்டிருப்பதனையும் அறியமுடிகிறது. பலதாரமண மற்றும் ஒற்றைத் திருமண மனைவிகளின் திருமணத்திற்கு இடையிலான உறவைத் தீர்மானிப்பதில் மனைவிகளிடையே வெவ்வேறு சமூகவியல் மாறுபாடுகள், மனச்சோர்வு மற்றும் புள்ளிவிவர ரீதியாக குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகள் இருப்பதாக ஓஸர் அலி (Özer Ali et al, 2013) போன்றோர் கருதுகிறார்கள்.

இன்னும் சொத்துக்களை தக்க வைத்துக் கொள்வதில் அதிகமான மனைவிமார்களுக்கிடையே தீவிரமும், போட்டியும் நிலவுவதையும் ஆய்வின் போது கண்டறியப்பட்டது. உதாரணமாக தனது கணவனின் உழைப்பினால் கிடைக்கும் வீட்டு உபகரணங்கள், தளவாடங்கள் மற்றும் பணம் போன்றவை தன் கணவரின் சக மனைவிக்கு கிடைக்கக் கூடாது என்றும் கணவனினால் கிடைக்கும் சொத்துக்களுக்கு தாங்கள் மட்டுமே உரித்துடையவர்கள் என்றும் கருதுகிறார்கள். “அவர் மற்றையவளின் வீட்டுக்கு செல்வதை நான் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டேன். மாதாந்த சீட்டுக் கட்டி அவளுடைய வீட்டினை அலங்கரிப்பதிலும் பழுது பார்ப்பதிலும் தான் தனது உழைப்பை செலவிடுகிறார். கணக்கு காட்டுவதில் என்னிடம் உண்மையாக நடந்து கொள்வதில்லை” (நேர்காணல் 6). பலதார குடும்பம் ஒன்று மகிழ்ச்சியாக இருக்க இறைவன் மீதான நம்பிக்கையின் அடிப்படையில் அத்திருமணத்தை பெண் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆர்மியா (2017) கருதுகின்றார்.

தான் விரும்பும் ஒன்றை தன் சகோதரனுக்கும் விரும்பாத வரை அவர் உண்மையான முஹ்மினாக கருதப்படமாட்டார். மேலும், ஒரு பெண் மற்ற மனைவியை விவாகரத்து செய்ய கணவனை வற்புறுத்தக் கூடாது. அவள் தனது கணவனை தன்னிடம் இருந்தும் தனது பிள்ளைகளிடம் இருந்தும் பறித்துக் கொண்டாள் எனும் மனநிலையில் இருக்க கூடாது. ஒரு பெண் தனது கணவனின் சக மனைவியிடம் நல்ல உறவினை வளர்த்துக் கொள்ளாமல் இருந்தாலும் அவளுடன் சண்டை பிடித்து பகைமையை வளர்ப்பது கூடாது. விசுவாசம் கொண்ட ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் பொறுப்பாளர்களாவர். அவர்கள் நன்மையை ஏவி தீமையை தடுப்பார்கள் (அல்தவ்பா 9:71).

இன்னும் குறிப்பிடக் கூடிய சில பெண்கள் தமது கணவரின் அடுத்த மனைவியை விட்டு பிரிந்து தம்முடன் மட்டுமே வாழுமாறும் மற்றையவளை தலாக் விடுமாறும் கூறக் கூடியவர்களாகவும் இருக்கின்றனர். ஒரு பெண் தன் கணவனின் மற்றொரு மனைவியை தலாக் விடுமாறு கூறுவது கூடாது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ஒரு பெண் மற்றொரு பெண்ணின் பாத்திரத்தை (வாழ்வாதாரத்தை) காலி செய்(துவிட்டு அதை தனதாக்கிக் கொள்)வதற்காக அவளை விவாகரத்துச் செய்துவிடுமாறு கோர அனுமதியில்லை. அவளுக்கு என விதிக்கப்பட்டது அவளுக்கே கிடைக்கும் (புகாரி. 5152). சொத்துப் பங்கீடு மற்றும் வாரிசுரிமை சட்டங்கள் பற்றிய அறிவும் விழிப்புணர்வும் பொதுவாக முஸ்லிம் சமூகத்தில் குறைவாகவே உள்ளது. அந்த வகையில் பொதுவாக முதல் மனைவியின் பிள்ளைக்கே தந்தையின் சொத்துக்களுக்கு அதிக உரிமை உண்டு என்றும் எஞ்சிய சொத்துக்களில் அடுத்தடுத்த மனைவியும் அவளது பிள்ளைகளும் பங்கு பெறலாம் எனும் கருத்தும் பலதார குடும்பங்களில் உள்ள பெரும்பாலான தாரங்களுக்கு மத்தியில் காணப்படுகின்றது. இவர்களின் இத்தகைய கருத்து இஸ்லாமிய வாரிசுரிமை சட்டங்களுடன் முரண்பட்டு செல்வதனை காணலாம். இந்த விடயம் தொடர்பில் முஸ்லிம்களிடம் சரியான பேணுதல் இல்லாமையினால் கணவனின் மரணத்துக்கு பின்னர் பலதார

குடும்பங்களில் பல சிக்கல்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உண்டு. ஒருவர் இஸ்லாமிய வழிகாட்டல்களின் கீழ் சட்டரீதியாக திருமணம் செய்து கொண்டால் அவரின் ஏனைய மனைவிகளும் சட்ட ரீதியான அந்தஸ்தினை பெறுவதோடு அவர்களுக்கு பிறந்த பிள்ளைகளும் தந்தையின் சொத்துக்களுக்கு உரித்துடையவர்களாகக் கருதப்படுகின்றனர். இது தொடர்பில் அல்குர்ஆனில் (அந்-நிஸா 4:7) இல் தெளிவாக குறிப்பிடுகின்றது. பெண்களிடையே பொறாமைக் குணம் இயல்பானது தான் ஆனால் அதுவே வாழ்க்கையை மோசமாக்கிக் கொள்ளும் விதத்தில் அமையக் கூடாது.

**3.1.3 பெற்றோர் பிள்ளைகள் உறவு**

பொதுவாக பலதார குடும்பங்களைப் பொறுத்தவரை பெற்றோர் பிள்ளைகளின் உறவு நிலைகள் சற்று எதிர்மறையாக உள்ளதனை அறியலாம். தந்தையின் மற்றுமொரு திருமணம் மூலம் சில பிள்ளைகள் தமது பெற்றோரை மதிக்காமல் நடப்பதாக பெண்களின் பதில்களில் இருந்து அறிய முடிகிறது. அதே நேரம் சில பிள்ளைகள் தமது தந்தையுடன் நெருங்கி பழகுவதில் தயக்கம் காட்டுவதாகவும் அவர்களின் தேவைகளை தாயிடமே அதிகம் முறையிடக் கூடியவர்களாக இருப்பதோடு பலதாரமணம் மூலம் பிள்ளைகளுக்கு தமது தகப்பன் மீதுள்ள நம்பிக்கையும், அன்பும் குறைந்துள்ளதாக அநேகமான பெண்கள் (9 பேர்) உணர்கிறார்கள். சில குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் தமது தகப்பனின் மற்றுமொரு திருமணத்தின் காரணமாக தகப்பனின் உறவினை துண்டித்து நடப்பதால் சில கணவன்மார்கள் தமது பிள்ளைகள் தொடர்பில் அக்கறையின்றி நடப்பதாகவும் அறிய முடிகிறது. எனவே பலதாரமணம் மூலம் தகப்பனுக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான உறவில் நெருக்கம் குறைவதாக பெரும்பாலான பலதரமணியாளர்கள் கருதுகின்றனர். எனினும் அதிகமான குடும்பங்களில் உள்ள பிள்ளைகளின் தேவைகளை தனது கணவன் கவனித்துக் கொள்கிறார்கள் என்பதில் பெண்கள் உடன்படுகிறார்கள். ஒரு தந்தை இன்னொரு திருமணம் செய்தாலும் தந்தைக்குரிய மரியாதையும் கண்ணியத்தையும் வழங்குவது பிள்ளைகளின் கடமையாக இருக்கிறது. அதே நேரம் தனது மனைவிமார்களின் அனைத்து பிள்ளைகளுடன் நியாயமான முறையில் நடப்பதும் தந்தையின் கடமையாக இருக்கிறது.

இஸ்லாத்தினைப் பொறுத்தவரை ''ஒவ்வொருவரும் தனக்கு கீழுள்ளவர்களுக்கு பொறுப்பாளி ஆவார்கள்'' (அத்தௌபா 9:71) எனும் வகையில் ஒரு கணவன் தனது ஒவ்வொரு மனைவிகளுக்கும் பிள்ளைகளுக்கும் பாதுகாப்பான வாழிடத்தை வழங்குவதும், நிதி ரீதியிலான தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதும், வீட்டில் தான் இல்லாத போது நம்பிக்கைக்கு உரிய குடும்ப உறுப்பினர்கள் யாராவது ஒருவரை பொறுப்பாக நியமிப்பதும் அல்லது வேறு வழிகளில் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதும் பொறுப்பாக இருக்கின்றது. அதே போல பிள்ளைகளும் தமது பெற்றோரிடம் கண்ணியமாக நடப்பதும் முக்கியமாகும்.

**3.1.4 மன உளைச்சல் மற்றும் கௌரவக் குறைச்சல்**

அதிகமான பெண்களின் பார்வையில் பலதாரமணமானது ஒரு கௌரவக் குறைச்சலான திருமணமாக கருதப்படுகிறது. காரணம் கிண்ணியா காலசாரத்தை பொறுத்தவரை பலதாரமணம் என்பது பொதுவான திருமண நடைமுறையாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை ஆதலால் ஒருவர் இரண்டாவது திருமணம் செய்தால் அவரை வித்தியாசமான கண்ணோட்டத்திலேயே சமூகம் பார்க்கிறது என்பதை பெண்கள் உணர்கின்றார்கள். கால்வாசிக்கும் அதிகமான பெண்கள் (5 பேர்) தமது கணவரின் மற்றுமொரு திருமணத்துக்குப் பின்னர் ஏற்பட்ட மனக்கசப்புகளுக்கும் குடும்ப பிரச்சினைகளுக்கும் மத்தியில் இருந்து தவித்ததனால் மணவிலக்கு கோரியதாக நினைவு கூர்ந்தனர்.

''எங்களுக்கு ஏற்கனவே எட்டு வயதுடைய மகன் இருந்தான். அவர் வேறொருவருடன் திருமணம் செய்து கொண்டார் என்று என் கனவில் நான் நினைத்திருக்க முடியாது. நான் அவருடைய இரண்டாவது திருமண ஒப்பந்தத்தை கண்டுபிடிக்கும் வரை எங்கள் திருமணம் சரியானது என்று தான் நினைத்தேன். அவர் ஏன் வேறொரு பெண்ணை திருமணம் செய்து கொண்டார் என்று

கேட்டேன். அவருக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை, அவர் மற்றுமொரு திருமணம் செய்ததற்கு எந்த காரணமும் இல்லை. சில போது தாங்க முடியாத கவலையினால் தலாக் கூறுமாறு கோரியிருக்கிறேன். அவர் மீதான என் அன்பையும், என் விசுவாசத்தையும் புறக்கணித்தார். அன்றிலிருந்து இன்றுவரை கவலை, மனச்சோர்வு மற்றும் அழுகை போன்றவற்றுக்கு நான் உள்ளாகி வருகிறேன்'' (நேர்காணல் *1*).

அதிகமான பெண்கள் பலதாரமணத்தின் மூலம் மன உளைச்சலுக்கு உள்ளானதாகவும் அதிக மனக் கவலைகளுக்கு மத்தியில் இருப்பதாகவும் குறிப்பிட்டனர். ''அவர் தனது மற்றுமொரு திருமணத்தை என் குடும்பத்தினருடன் நியாயப்படுத்த முயன்றார். இஸ்லாம் நான்கு பெண்களை திருமணம் செய்வதற்கான உரிமையை அவருக்கு வழங்குவதாகவும், அது இங்கு பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டதால் யாரும் அவருடன் வாதிடவில்லை என்றும் அவர் கூறினார். இது ஒரு மனைவி, குழந்தைகள் மீது ஏற்படுத்தும் உளவியல் விளைவு, அவர்கள் அதை ஒரு மதக் கண்ணோட்டத்தில் மட்டுமே பார்க்கிறார்கள் அது மிகவும் குறைபாடுடையது. ஒரு பைத்தியக்காரியைத் தவிர வேறு எவளும் தன் கணவனை இன்னொருத்திக்கு விட்டு கொடுக்க மாட்டாள்'' (நேர்காணல் *2*). சில கணவர்கள் பன்மை திருமணத்தினால் மனைவிகளுக்கிடையே அன்பினையும் இணக்கத்தையும் நிலைநிறுத்த இயலாமை குறித்து குற்ற உணர்வை அனுபவிப்பதோடு இருவருக்குமுள்ள காதல் மற்றும் நெருக்கம் என்பன குறைந்து விடுகிறது என ஜாங்கோவிக் (Jankowiak, 2008) கருதுகின்றார். இவரின் கருத்தானது கிண்ணியா பெண்களின் கருத்துக்களோடு ஒத்துச் செல்வதாகவே அமைகிறது.

ஒருவரின் சுயமரியாதை என்பது மற்றவர்களிடம் இருந்து பெற வேண்டிய மரியாதை, புகழ், அந்தஸ்து போன்ற அம்சங்களைக் கொண்டு அமைகிறது. பலதாரமண சூழலில் இவையனைத்தும் பயனற்றுப் போய்விடக் கூடிய அபாயங்கள் உள்ளதால் இது ஒரு மனைவியின் நிலையையும் பாத்திரத்தையும் பாதிக்கும் ஒரு விடயமாக இருக்கின்றதென ரோம்லாஹ் (Romlah et al, *2010*) குறிப்பிடுகிறார். பலதாரமணம் தமது சுயகௌரவத்தினை பாதிக்கிறது எனும் கருத்து நிலையில் அதிகமான பெண்கள் உடன்படுபவர்களாக உள்ளனர். உண்மையில் பெண்கள் கவலைப்படுவதை அல்லாஹ் விரும்புவதில்லை. எனவே ஒருவர் தொடர்ந்தும் மன உளைச்சலில் தவிப்பதானது அகத்திற்குக் கேடாக அமைந்து விடுவது மட்டுமன்றி ஈமானையும் பலவீனப்படுத்தும்.

#### 3.1.5 குடும்ப வன்முறை

நெருக்கமான கூட்டாளர் வன்முறை intimate partner violence (ஐபிவி) உலகம் முழுவதும் பரவலாகவும் பொதுவானதாகவும் இருப்பதாக பல நாடுகளின் சமீபத்திய ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன (Devries et al., 2013; WHO, 2013). கணவனினால் நிதி மற்றும் ஆதரவு வழங்குதல் தொடர்பான அம்சங்களில் ஒவ்வொரு மனைவிகளுக்கும் இடையில் வித்தியாசங்கள் இருக்கின்றன. வெவ்வேறு அந்தஸ்துள்ள பலதார குடும்பங்களுக்கு இடையேயுள்ள மோதல்கள், பிரச்சினைகளின் வடிவங்கள் மாறுபட்டு அமைவதுடன் வீட்டு உறுப்பினர்களினால் வெளிக்காட்டப்படும் எதிர்பார்ப்புகள், முடிவெடுத்தல், தொடர்பு கொள்ளல் ஆகியனவும் ஒப்பீட்டளவில் வேறுபட்டவையாக இருக்கின்றன.

ஒரு கணவர் மற்றைய மனைவியை எடுத்துக் கொள்ளும் போது முதல் மனைவியும் பிள்ளைகளும் அச்சுறுத்தப்படலாம். இதனால் சில சமயங்களில் இணை மனைவிக்கு கிடைக்கக் கூடிய வளங்கள் மூத்த மனைவியினால் தடுக்கப்படலாம் என்று மீக்கர்ஸ் (Meekers, *1995*) தனது ஆய்வில் ஆவணப்படுத்தியுள்ளார். எனவே கணவனின் பாரபட்சமான வளப்பகிர்வானது வீடுகளில் உள்ளவர்களுக்கு இடையே மோதலை ஏற்படுத்தும் ஒரு காரணியாக அமைகிறது. இந்நிலையே கிண்ணியா பிரதேசத்திலுள்ள பலதார குடும்பங்களுக்கு மத்தியிலும் காணப்படுகிறது. ஆண்களின் சுயமரியாதையானது வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறனால் மேம்படுத்தப்படுவதாகவும் பெண்களின் பதில்களிலிருந்து புலனாகிறது. பலதார குடும்பங்களிலுள்ள அநேகமான முதல் தாரங்கள் தமது கணவனினால் உள ரீதியிலும், உடல் ரீதியிலும் வன்முறைகளுக்கு உள்ளாகி இருந்ததோடு வீட்டிலும், வெளியிலும் அதிக பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருப்பதாகவும் குறிப்படுகின்றனர். கர்னாவி (Al-Krenawi, *2001*)

குறிப்பிடுவதைப் போன்று ஒப்பீட்டளவில் பலதார குடும்பங்களிலுள்ள மூத்த மனைவிகள் பதட்டம், ஞாபக மறதி, குறைந்த சுயமரியாதை போன்ற நிலைகளுக்கு உள்ளாவதாக அறிய முடிகிறது. "எனது வீட்டில் சண்டைகள் இல்லாத நாட்களே இல்லை. முன்பெல்லாம் அவளுக்காக வீட்டுக்குள்ளே தான் சண்டை பிடிப்பார். இப்போதெல்லாம் வீட்டுக்கு வெளியிலும் சண்டை பிடித்து என்னையும் என் குடும்பத்தையும் கேவலப்படுத்தி என்னைக் காயப்படுத்துவது அவருக்கு பழகி விட்டது" (நேர்காணல் 4).

தமது வாழ்வில் இன்னொரு பெண்ணின் வருகையானது குடும்பத்துக்கு அச்சுறுத்தலாய் பார்க்கப்படுவது பெரும்பாலான மூத்த தாரங்களின் கருத்து நிலையாக இருக்கின்றது. தமது கணவனின் மற்றுமொரு திருமணம் தமக்கும் தமது பிள்ளைகளுக்கும் எந்த ஒரு சாதகமான விளைவினையும் ஏற்படுத்தவில்லை எனும் கருத்தானது ஒப்பீட்டளவில் பெரும்பாலான மூத்த தாரங்களுக்கு மத்தியில் உள்ளது. காழ்வாசிக்கும் குறைவான பெண்களே பலதாரணம் பெண்களுக்கு சாதகமானதெனக் குறிப்பிடுகின்றனர். இதற்கு அவர்கள் கூறும் காரணம் விதவைப் பெண்களுக்கும், ஏழைப்பெண்களுக்கும் முதுகன்னிகளுக்கும் மறுமணம் அவசியமானதாக இருப்பதனால் பலதரமணத்தின் மூலம் அவர்கள் பாதுகாப்பினையும் ஆதரவையும் பெறுவார்கள் என்பதாக இருக்கின்றது.

பெண்களுக்கு அடிப்பதையும் அவர்களை தொல்லைப்படுத்துவதையும் இஸ்லாம் வன்மையாக கண்டிக்கிறது. "நீங்கள் உங்கள் மனைவியரை அடிமையை அடிப்பது போல் அடிக்க வேண்டாம்." (புஹாரி. இல. 5204). மேலும் அவள் திருந்தாத சந்தர்ப்பங்களில் மெதுவாக அடிக்குமாறு கூறுகின்றது. அத்தோடு வீடு அல்லாத ஏனைய இடங்களில் பெண்ணின் மீது வெறுப்பைக் காட்ட வேண்டாம் என்றும் இஸ்லாம் பணிக்கிறது. இதற்கு மாற்றமாக கணவன்மார்கள் செயற்படுகின்ற போது மேலும் மேலும் மனைவியின் கோபத்தினையும் வெறுப்பையும் சம்பாதித்துக் கொள்கின்ற நிலையே தோன்றும். குடும்ப வாழ்வில் ஒரு கணவனும் மனைவியும் அவர்களுக்கு கீழ் உள்ளவர்கள் பற்றி கவனமாக இருக்க வேண்டும். இஸ்லாமிய குடும்பம் ஒன்று சரியாக இயங்க வேண்டுமெனில் அக்குடும்பத்தில் பிரதான பங்குதாரர்களான கணவனும், மனைவியும் இறை திருப்தியை நாடி ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாக இருத்தல் அவசியமாகும். இம்மை வாழ்க்கைக்கு மட்டுமன்றி மறுமை வாழ்வின் நலனைப் பெறுவதற்காகவும் அவர்கள் முயற்சி செய்ய வேண்டும். ஒரு கணவர் தனது மனைவியை வெறுத்தாலும் அவளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு அல்குர்ஆன் (04:19) கட்டளை இடுகின்றது.

### 3.1.6 வாழ்கைத் திருப்தி

இஸ்லாம் திருமண வாழ்வின் மூலம் எதிர்பார்ப்பது அமைதியும் ஆறுதலுமாகும். ஆனால் இங்கு பெரும்பாலான பெண்களின் கருத்தின் அடிப்படையில் நோக்கும் போது பல குடும்பங்களில் அமைதி சீர்குலைந்துள்ளதனை அறியலாம். பலதார குடும்பங்களில் இரண்டாவது மற்றும் மூன்றாவது மனைவிகளைக் காட்டிலும் முதல் மனைவிகள் அதிகமான குடும்பப் பிரச்சினைகள், குறைவான வாழ்க்கைத் திருப்தி , அதிக கவலை, சித்தப்பிரமை மற்றும் அதிகமான மனநோய்களுக்கு உள்ளாவதாக கர்னாவி (Al-Krenawi, 2013) சுட்டிக்காட்டுகிறார். இக்கருத்து நிலையிலேயே அநேகமான மூத்த தாரங்களும் இருப்பதாகத் தெரிகின்றது. "எங்களுக்கு திருமணமாகி 19 வருடங்கள் ஆகின்றன, மூன்று குழந்தைகளைப் பெற்றோம். நான் இன்னொரு திருமணம் செய்து கொண்டேன் என்று அவர் சொல்வதைக் கேட்டபோது நான் உணர்ந்ததை என்னால் விவரிக்க முடியாது. நான் பேரழிவிற்கு ஆளானேன். ஆனால் அவரின் திருமண நிலைமையை ஏற்கக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன்" (நேர்காணல் 3).

அநேகமான மூத்த மனைவிகளின் கருத்துக்களின் படி தனது கணவன் தன்னைத்தான் முதலில் திருமணம் செய்துள்ளமையால் தனக்கும் தனது பிள்ளைகளுக்குமே அதிக பாதுகாப்பு வழங்க வேண்டுமென்று எதிர்பார்தவர்களாக உள்ளனர். இன்னும் படி தமது கணவர் முடிவு எடுக்கும் விடயங்களில் தம்மை இணைத்துக் கொள்வதில் திருப்தியற்றவர்களாக உள்ளனர். பெரும்பாலான நேரங்களில் அவர்களது கணவன்மார்களாலேயே தீர்மானம் எடுக்கப்படுவதாகவும், ஒரு சில சந்தர்ப்பங்களிலேயே பெண்களின் ஆலோசனைகளை கேட்டு முடிவெடுப்பதாகவும் அறிய

முடிகின்றது. இன்னும் பலதார குடும்பங்களில் உள்ள அதிகமான பெண்களின் கூற்றின் படி ஒரு குறிப்பிட்ட விடயத்தினைப் பற்றிய கருத்தினை தமது கணவன்மார்களிடம் பரிமாறும் போது அது சரியோ பிழையோ எவ்வாறாயினும் அதனை காது கொடுத்துக் கேட்க வேண்டும் என்பதை எதிர்பார்த்தவர்களாக உள்ளனர். எனவே, இதன் மூலம் கருத்துப் பரிமாற்றம் மற்றும் முடிவெடுத்தல் போன்றவற்றில் பலதாரகுடும்பங்களில் உள்ள பெண்கள் அலட்சியப்படுத்தப்படுவதனை விளங்கிக் கொள்ள முடிகிறது. ஹுதைபிய்யா உடன்படிக்கையில் நபி (ஸல்) அவர்கள் மனைவி உம்மு ஸல்மா (ரலி) அவர்களின் ஆலோசனையின் படி நடந்து கொண்டதால் தான் ஸஹாபாக்கள் நபி (ஸல்) அவர்களுக்கு கட்டுப்பட்டார்கள். இந்த உடன்படிக்கையின் மூலம் மிகப்பெரிய வெற்றியை பெற்றதாக திருமறையின் வசனம் (அல்பத்ஹ் *48:1-3)* தெளிவுபடுத்துகின்றது. எனவே, இஸ்லாமியப் பார்வையில் ஒரு கணவன் தனது சகமனைவிகளிடம் நீதமாகவும், சமமாகவும் நடப்பதோடு அவர்கள் மரியாதையாகவும் கௌரவமாகவும் நடத்த வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அனைவருக்கும் பொதுவானது.

பலதாரமணம் என்பது இஸ்லாம் தோன்றிய போது ஏற்படுத்தப்பட்ட ஆரம்பகால நடைமுறை என்று அநேகமான மூத்த தாரங்கள் நம்புவதால் அதனை தற்காலத்தில் உள்ள பெண்களால் சகித்துக் கொள்ள முடியாது என்றும் இஸ்லாத்தின் ஆரம்ப காலங்களில் வாழ்ந்த பெண்களின் கணவன்மார்கள் அவர்களிடம் நீதமாகவும், அன்பாகவும் அதே நேரம் இறைவனுக்கு பயந்தும் வாழ்ந்தது போலவே அன்றைய பெண்களும் கணவனுக்கு கட்டுப்பட்டு, இறை திருப்தியை நாடியும் பொறுமையாக இருந்தார்கள். எனவே, அவர்களுக்கு பலதாரமணம் என்பது சவாலானதாக இருந்திருக்குக்காது என அபிப்பிராயப்படுவதுடன் இரண்டாவது மனைவியின் வருகைக்கு பின் தன் கணவனுக்கு தன் மீதுள்ள அன்பும் இரக்கமும் குறைந்ததாக பெண்கள் குறிப்பிடுவதுடன் பிற மனைவி மீதுள்ள அன்பினாலேயே தான் புறக்கணிக்கப்படுவதாகவும் அவரினால் வெறுக்கப்படுவதாகவும் கவலை கொள்கிறார்கள்.

"நம்பிக்கை கொண்டோரே! பெண்களை வலுக்கட்டாயமாக அடைவது உங்களுக்கு அனுமதியில்லை. அவர்களுக்கு நீங்கள் வழங்கியதில் எதையும் பிடுங்கிக் கொள்ளாதீர்கள். அவர்களை துன்புறுத்தாதீர்கள். அவர்கள் வெளிப்படையான வெட்கக் கேடானதை செய்தாலே தவிர, அவர்களுடன் நல்ல முறையில் குடும்பம் நடத்துங்கள்"(அந்நிஸா *4:19*) இஸ்லாமிய சட்டங்கள் எக்காலத்துக்கும் பொருந்தக் கூடிய தன்மையினைக் கொண்டுள்ளது. பெண்களுக்கு எது நலவோ அதனையே இறைவன் சட்டமாக்கினான். ஆகவே, ஒவ்வொரு பெண்ணும் அல்லாஹ்வால் வழங்கப்பட்ட பெண்ணுரிமையின் இயல்பான மனநிலையில் இருந்து சிந்திப்பதோடு இஸ்லாமிய வரம்புகளை மீறாமல் நடக்க வேண்டும். பலதாரமண வாழ்வில் விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, பொறுமை ஆகியவற்றைக் கைக்கொண்டால் பிரச்சினைகள் பெரிதாக இருக்காது. ஏனெனில் இறைவன் அமைத்த சட்டங்கள் மனித நலன்களுக்கேயாகும். இஸ்லாம் பெண்களின் கண்ணியத்தையும், அந்தஸ்தையும் பேணுவதனை நோக்காகக் கொண்டு தான் பலதாரமணத்தினை அனுமதித்து அதனை பெண்களுக்கு சௌகரியப்படுத்தியுள்ளது. ஆனால் இன்றைய சூழலில் பலதாரமணமானது பெண்கள் மத்தியில் எதிர்மாறான கருத்தைத் தோற்றுவித்துள்ளதனை ஆய்வின் போது அறியக்கூடியதாக உள்ளது.

### 3.2 சமூக வாழ்வு

பலதாரமணமானது ஒற்றைத் திருமணங்களை விட இரு மடங்கு முரண்பாடுகளை கொண்டமைந்துள்ளதாகவும் இது சிக்கலான ஆழ்ந்த கலாச்சார, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் வேர்களைக் கொண்ட அதிகார உறவுகளின் விளைவெனவும் நிஹாயா (Nihaya, 2013) குறிப்பிடுகின்றார். திருமணமான ஆண்களும் கூட திருமண சந்தையில் வற்றாத நிலையில் இருப்பதால், உயர் அந்தஸ்து கொண்டவராகவே கருதப்படுகின்றார். இதில் ஆண்களுக்கு எந்தவித கௌரவக் குறைச்சல்களும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் பெண்களே தங்கள் சமூகத்தின் முன் சுயமரியாதையை இழந்தவர்களாக உணரும் அதே வேளை பிறராலும் விமர்சனத்துக்கு உள்ளாவதாகவும் அறிய முடிகிறது. மூத்த தாரங்களின் திருமண வாழ்வின் ஆரம்ப காலங்களிலும் இடைப்பட்ட காலங்களிலும் கணவன் தன் மீதும் தன் குடும்பத்தின் மீதும் அதிக நேசம் கொண்டவராக இருந்தார் என்பதை அதிகமான பெண்கள் உணர்கிறார்கள். அந்த

வகையில் மனைவிமார்களையும் பிள்ளைகளையும் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லுதல், உறவினர்களின் வீட்டுக்கு விருத்துக்குச் செல்லுதல் மற்றும் கடற்கரைக்கு அழைத்துச் செல்லுதல் போன்றவற்றின் மூலம் தமது கணவனின் அன்பு வெளிப்பட்டதாக கருதுகின்றனர். ஆனால் கணவரின் மற்றுமொரு திருமணத்துக்கு முன்பு சமூகத்தினால் வழங்கப்பட்ட தனியாளுக்குரிய மரியாதையும், வரவேற்பும் திருமணத்துக்கு பின்னர் குறைவாகவே இருப்பதாக குறிப்பிடுகின்றனர். பலதார மணம் கொண்ட பெண்களின் அனுபவங்கள் குறிப்பிட்ட சமூக கலாசார மற்றும் தனிப்பட்ட சூழல்களில் மட்டுமே புரிந்து கொள்ள முடியும் என சங்கீதா மாதவன் (Madhavan, 2002) கருதுவது இவ்வாய்வின் முடிவோடு பொருந்தக்கூடிதாகவுள்ளது.

பலதாரமணமானது சமூக வாழ்வில் குறிப்பிடக்கூடிய பங்கினை வகிப்பதாக கர்னாவி (2000) குறிப்பிடுகிறார். அநேகமான மூத்த தாரங்கள் தமது கணவனின் இன்னொரு திருமணத்துக்கு பின்னர் சமூக நிகழ்வுகளில் பங்குபற்றுதல், வெளியில் பிரயாணங்கள் செய்தல், பிள்ளைகளின் பாடசாலை கூட்டங்களில் கலந்து கொள்வதனை விட்டும் தவிர்ந்து இருத்தல் போன்ற நிலைகளுக்கு உள்ளாகி இருப்பதை நேர்காணல்களின் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. அதே நேரம் மிகக் குறைவான மூத்த மனைவிகளே சமூகத்துடன் தொடர்ந்தும் இணைந்து செயற்படுவதில் ஆர்வம் கொண்டவர்களாக உள்ளனர். பொது வாழ்வு சார்ந்த விடயங்களில் பங்குபற்றுவதற்கும், தம் சுதந்திரமாக இல்லாமைக்கும் பலதாரமண வாழ்வு ஓர் காரணியாக இருப்பதாக அநேகமான பலதார குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் குறிப்படுகின்றனர்.

திருமணத்தின் மூலம் முதல் மனைவி எவ்வளவு உரிமைகளை பெறுகிறாளோ அதே உரிமைகளையே சகமனைவியும் பெறுகிறாள். உண்மையில் பெண்களை பாதுகாப்பாகவும், மரியாதையாகவும் நடத்த தெரியாத ஒரு சமூகம் சிறந்த சமூகமாக இருக்காது என்று நம்புகிறேன். ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை திருமணம் செய்ய நினைக்கும் ஆணுக்கு பல பொறுப்புகளையும், கடமைகளையும் சுமத்தியுள்ளது. நீதி மற்றும் நியாயத்தின் அடிப்படையில் மனைவிமார்களை கவனிக்க வேண்டும் என்பதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. மனைவிமார்களுக்கு இடையே நியாயமாகவும், நீதியாகவும் இருக்க முடியாது என்று அஞ்சினால் ஒரு மனைவியுடன் மாத்திரம் மட்டுப்படுத்திக் கொள்ளட்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது. தற்காலத்தில் பலதாரமணமானது பெண்களுக்கு பாதகங்களையே ஏற்படுத்தக் கூடும் எனும் கருத்து நிலையே பெரும்பாலான கிண்ணியா வாழ் பலதாரமணியாளர்களுக்கு மத்தியில் காணப்படுகின்றது. இதற்கு அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள காரணங்கள் தற்போதைய சூழலின் போக்கு, தமது மனோபாவம், நம்பிக்கை, சமூகத்தின் எதிர்மறையான விமர்சனம் ஆகியவற்றை தழுவியதாகத் தெரிகின்றது.

## 4. முடிவுரை

இன்றைய சூழலில் பலதாரமணம் பெண்களுக்கு தீங்காக அமைவதால் இதனை நடைமுறைப்படுத்துவது பொருத்தமற்றது என்றும் மறுபுறம் பலதாரமணத்தினால் பெண்கள் சாதகமான விளைவுகளை அனுபவிப்பார்கள் என்றும் இருவேறுபட்ட கருத்து நிலைகள் கிண்ணியா வாழ் பலதாரமணியாளர்களுக்கு மத்தியில் காணப்படுகின்றன. ஒப்பீட்டளவில் பெரும்பாலான பெண்கள் (17 பேர்) பலதாரமணத்தினை யாருக்கும் பரிந்துரை செய்ய முடியாது எனும் கருத்து நிலையிலும் மிகக் குறைவான பெண்களே (2 பேர்) பலதாரமணத்தினை ஆதரிப்பவர்களாகவும் உள்ளனர். எனவே பெரும்பாலான மூத்த தாரங்களுக்கு மத்தியில் பலதாரமணம் குறித்த எதிர்மறையான கருத்து நிலைகள் மேலோங்கிக் காணப்படுவது ஆய்வின் முடிவாக அமைந்துள்ளது. பலதாரமண வாழ்வில் ஒவ்வொரு பெண்ணினதும் அறிவு நிலை, அனுபவம், சூழல் என்பன ஆளுக்காள் வித்தியாசப்படுகிறது. பலதாரமணம் பற்றிய பெண்களின் புரிதலானது தமது மனோபாவம், மத நம்பிக்கை, கிண்ணியாவின் பிரத்தியோகிய சூழல், குடும்பங்களின் கட்டமைப்பு மற்றும் தங்களின் அன்றாட வாழ்வியல் அம்சங்கள் போன்றவற்றை மையப்படுத்தியாகவே அமைகின்றன. கணவன், முதல் மனைவியின் பரஸ்பர சம்மதத்தின் மூலம் மற்றுமொரு திருமணம் செய்தால் சம்மந்தப்பட்ட அனைவருக்கும் குறைந்தளவான சிக்கல்களையே ஏற்படுத்தும். மனிதன் தனது மனைவிகளிடையே நபக்காவின் அளவு, அதன் தரம், வகை, பாலியல் இன்பம் மற்றும் நடத்தை ஆகியவற்றிலும் கூட சமத்துவத்தினை

பேணுவதோடு வயது, அழகு, சமூக அந்தஸ்து ஆகியவற்றில் மனைவிகளிடையே வித்தியாசங்கள் இருந்தாலும் அவர்களிடம் நீதமாக நடந்து கொள்வது ஆண்களின் கடமையாக இருக்கிறது. மேலும் பலதார குடும்பங்களுக்கான மார்க்க போதனைகளை நடைமுறைப்படுத்த, உருவாக்க, செயல்படுத்த, மதிப்பீடு செய்ய வேண்டியதன் அவசியத்தை முஸ்லிம் குடும்பங்களுக்கு உணர்த்துவதுடன் பெண்களின் மன ஆரோக்கியத்தில் பலதாரமணம் ஏற்படுத்தும் விளைவுகள் குறித்தும் கூடுதல் ஆராய்ச்சி நடத்தப்பட வேண்டும். ஆய்வுக்காக பதிலளித்த பெண்கள் ஒப்பீட்டளவில் குறைந்த எண்ணிக்கையிலான பெண்களாக உள்ளனர். பலதாரமண உறவுகளில் உள்ள பெண்களின் தொகையை தற்போதைய மக்கள் தொகைக்கு பொதுமைப்படுத்தல் செய்ய முடியாது என்பதே இதன் பொருள். எனவே எதிர்காலங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வில், ஆய்வுக் குடித்தொகையை அதிகரிக்கலாம் போன்ற சில ஆலோசனைகளையும் இவ்வாய்வுக்கட்டுரை முன்வைக்கிறது.

## உசாத்துணைகள்


ஹஸனாஹ், சேகு இஸ்ஸதீன். (2015). *இஸ்லாமிய நோக்கில் பால்நிலை சமத்துவம் மற்றும் சமநீதி முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டமும் இஸ்லாமிய சட்டமும்.* தெஹிவளை : இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம்.

சூளனி, கொடிகார. (2009). *இலங்கையின் முஸ்லிம் குடும்பச் சட்டம் கொள்கை, நடைமுறைமற்றும ் பெண்கள ் தொடர்பான அக்கறைக்குரிய விடயங்கள்.* கொழும்பு: முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி.

மர்சூப். (2008). *இலங்கையின் காதி நீதிமன்ற முறைமையும் முஸ்லிம் பெண்கள் மீதான அதன் தாக்கமும். கொழும்பு:* முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி.

Al-Krenawi, A. A., Graham, J. R., & Al-Krenawi, S. S. (1997). Social work practice with polygamous families. *Child & Adolescent Social Work Journal*, 14(6), 445–458

Al-Krenawi, A (2001). Women from polygamous and monogamous marriages in an out-patient psychiatric clinic. *Transcultural Psychiatry* 38, 187–199.

Al-Krenawi, A, Graham, JR. (1999 *b*). The story of Bedouin-Arab women in a polygamous marriage. *Women's Studies International Forum* 22, 497–509

Al-Krenawi, A., & Lightman, E.S. (2000). Learning achievement, social adjustment, and family conflict among Bedouin-Arab children from polygamous and monogamous families. *Social Psychology*. 140 (3), 345-355.

Ameenah, Bilal, P. & Jamila, j.(2005). *polygamy in Islam*. (2nd ed.). Riyadh: international Islamic publishing house.

Arif, Y., Fatma, Y. (2018). Syrian Woman's View of Polygamy. *The Eurasia Proceedings of Educational & Social Sciences (EPESS)* 10 P. 223-233

Dena Hassouneh, P. (2010, Nov 10). Polygamy And Wife abuse : A Qualitative Study Of Muslim Women In America. *Health Care for Women International. 22* P.735 - 748

Grossbard, Amyra. (1976). An Economic Analysis of Polygyny: The Case of Maiduguri. *Current Anthropology* 17(4):701-707.

Jankowiak, William 2008 Co-Wives, Husband, and the Mormon Polygynous Family. *Ethnology* 47(2/3):163-180.

Janas Khan , Zahoori . (2015, June). Islamic Concept Of Polygamy Its Benefits And Impact On Society. P. 31 - 38 Retrieved From https://www.sbbu.edu.pk/actaislamica/issue5(3)%20%20islamic%

Khasawneh, O., Hijazi, A., & Salman, N. (2011). Polygamy and Its Impact on the Upbringing of Children: A Jordanian Perspective. *Journal of Comparative Family Studies, 42*(4), 563-577. Retrieved September 15, 2020, from http://www.jstor.org/stable/41604468

Madhavan, Sangeetha 2002 Best of Friends and Worst of Enemies: Competition and Collaboration in Polygyny. *Ethnology* 41(1):69-84

Mashhour, Amira. (2005). Islamic Law and Gender Equality: Could There be a Common Ground?: A Study of Divorce and Polygamy in Sharia Law and Contemporary Legislation in Tunisia and Egypt. *Human Rights Quarterly*. 27. 562-596. 10.1353/hrq.2005.0022.

Meekers, Dominique and Nadra Franklin. (1995). Women's Perceptions of Polygyny among the Kaguru of Tanzania. *Ethnology* 34(4):315- 329.

Nadia, M. (2016). Rethinking polygamy in islamic exegetical discourse. *International Journal of Arts & Sciences* 09*(03)* p. 413–426.

Nihaya, D. (2013, May 30). Polygamy and Poor Mental Health Among Arab Bedouin Woman: Do Socioeconomic Position and Social Support Matter? *Journal of Ethnicity and Health. 19*(4) P. 385 - 405 Retrieved From https://www.tandfonline.com/doi/abs/10.1080/13557858.2013.801403?journal

Nurmila, Nina. (2009). *Woman Islam and everyday life renegotiating polygamy in Indonesia*. New York: Routledge

Özer Ali, Orhan FÖ, Ekerbiçer HÇ. (2013) Sociodemographic variables and depression in Turkish women from polygamous versus monogamous families. *Health Care Women Int*. 34(11):1024-34. doi: 10.1080/07399332.2012.692414. Epub 2013 Feb 27. PMID: 23445340.

Romlah, Siti & Puspitawati, Ira & Psi, S & Si, M. (2010). Self-Esteem in Which Wife Polygamy. Confrence Paper

Shepard, Lindsay. (2012). The impact of polygamy on women's mental health: A systematic review. *Epidemiology and Psychiatric Sciences*. 22. 1-16. 10.1017/S2045796012000121.

Sheribny. A.M. (2005). The case of first wife in polygamy decription of an arab culture specific condition *Arabpsynet e Journal* October December retrived from. http://arabpsynet.com/archives/op/apnJ8LotfiElsherbinie.pdf

Sheriff, H. (1977). *Why polygamy is allowed in Islam*. Iran: A group of muslim brothers.

Syeda, Azad. (2018). Laws of muslim marriage from concept of the holy Quran. *International Journal of Engineering and Applied Science*

The Women and Media Collective. (2017). 66th Session of the CEDAW Committee Geneva, Switzerland 13 February- 03 March Retrived from https://tbinternet.ohchr.org/Treaties/CEDAW/Shared%20Documents/LKA/INT_

Thobajane, T. D. & Flora, T. (2014, Dec 1) . An Exploration Of Polygamous Marriages: A Worldview. *Mediterranean Journal of Social Sciences. 5*(2039-2117) P. 10-58 Retrieved From http://www.researchgate.net/publication/285516678

Wadud, Amina. (1999). *Qur'an and Woman: Rereading the Sacred Text from a Woman's Perspective*: Oxford University Press.

**நேர்காணல்**

1. *ஜரீனா, ஆ.இ 03. மார்ச். 2020. நேர்காணல்: அண்னல்நகர்*
2. *நிஸா, ர.இ. 05. மார்ச். 2020. நேர்காணல்: மாஞ்சோலைச்சேனை*

*3. ஹலிமா, யு.இ. 04. மார்ச். 2020. நேர்காணல்: பைசல்நகர்*
*4. சஹீலா, யு.ஆ.இ. 04. மார்ச். 2020. நேர்காணல்: அண்னல்நகர்*
*5. ரிஸ்மியா, மு.இ. 03. மார்ச். 2020. நேர்காணல்: அண்னல்நகர்*
*6. றிஸ்னா, ஆ.இ 01. மார்ச். 2020. நேர்காணல்: குறிஞ்சக்கேணி*